# சீறத்துன்னபி ﷺ

## நாள் 10



# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: வஹீ வந்தபின் முதல் மூன்று ஆண்டுகள்
- பகுதி 2: குடும்பத்திற்கு அழைப்பு விடுத்தது
- பகுதி 3: ஸஃபா மலையிலிருந்து பொது அழைப்பு விடுத்தது
- பகுதி 4: குரைஷிகள் அபுதாலிபுக்கு அழுத்தம் கொடுத்தது

## பகுதி 1: வஹீ வந்தபின் முதல் மூன்று ஆண்டுகள்

- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முதல் வஹீ வந்ததிலிருந்து அடுத்த மூன்று வருடங்கள் வரை மிகவும் தனிப்பட்ட முறையில் தாஃவா (இஸ்லாமிய அழைப்பு) செய்தார்கள். யார் ஏற்றுக்கொள்வார்கள் என்று அவர்கள் நினைத்தார்களோ, அவர்களை மட்டுமே இஸ்லாத்திற்கு அழைத்தார்கள்.

- இந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு ஒளு (அங்கத் தூய்மை) மற்றும் தொழுகை கற்பிக்கப்பட்டது, ஆனால் தொழுகை கட்டாயமாக்கப்படவில்லை. இருந்தபோதிலும், முஸ்லிம்கள் தொழுகையை தவறாமல் கடைபிடித்து வந்தனர்.

- மக்காவில் உள்ளவர்கள் இஸ்லாத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினர். ஆனால் அந்தச் செய்தி தனிப்பட்ட முறையில் பரப்பப்பட்டதால், வெளிப்படையான மோதல்கள் ஏதும் இல்லை.

- நபி (ஸல்) அவர்கள் வேண்டுமென்றே தாஃவாவை முதல் 3 வருடங்கள் தனிப்பட்ட முறையில் செய்தார்கள். அம்ர் இப்னு அபாஸா (ரலி) அவர்களால் அறிவிக்கப்பட்ட, ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள பின்வரும் சம்பவத்தின் மூலம் இதை நாம் அறியலாம்:

- ஜாஹிலிய்யா (அறியாமை) காலத்தில், சிலை வணக்கம் தவறு என்று தெரிந்ததால், அம்ர் அவர்கள் அதைச் செய்யவில்லை.

- அம்ர் யமன் நாட்டைச் சேர்ந்தவர். மக்காவில் உள்ள ஒரு நபி ஓரிறை கொள்கையை பரப்புவது பற்றி அவருக்குச் செய்தி வந்தது. எனவே அவர் மக்காவிற்குச் சென்று நபி (ஸல்) அவர்களை மறைவிடத்தில் சந்தித்தார்.

- அவர் நபி (ஸல்) அவர்களிடம், ‘‘நீங்கள் யார்? என்ன போதிக்கிறீர்கள்?’’, என்று கேட்டார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ‘‘உறவுகளை நிலைநிறுத்தவும், அனைத்து சிலை வணக்கங்களையும் ஒழிக்கவும், அல்லாஹ் ஒருவனே இறைவன் என அறிவிக்கவும் அனுப்பப்பட்ட ஒரு ரசூல் நான்’’ என்று பதிலளித்தார்கள்.

- அம்ர் தான் இஸ்லாத்தை தழுவ விரும்புவதாக கூறினார். ஆனால் அம்ர் யமனில் இருந்து வந்தவர் என்பதால் மக்காவில் அவருக்கு பாதுகாப்பு

இருக்காது என்பதை நபி (ஸல்) அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''இப்போது நீங்கள் இதைச் செய்ய வேண்டாம். நானும், என் மக்களும் வாழும் இந்த இக்கட்டான நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? நீங்கள் உங்கள் மக்களிடமே திரும்பிச் செல்லுங்கள். எனக்கு வெற்றி கிடைத்ததை நீங்கள் கேள்விப்பட்டதும், என்னிடம் வாருங்கள்'', என பதிலுரைத்தார்கள்.

- எனவே அம்ர் மீண்டும் யமனுக்குச் சென்றார். நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவை அடைந்துவிட்ட செய்தியைக் கேட்டதும், அவர் மதீனாவிற்குச் செல்கிறார். நபி (ஸல்) அவர்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். அந்த நேரத்தில் அம்ர் இஸ்லாத்தை தழுவினார்.

- மேற்கண்ட சம்பவத்திலிருந்து, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முதல் மூன்று வருடங்களில் தாஃவாவை மிகவும் தனிப்பட்ட முறையில் செய்து வந்தார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

- இது ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தை தழுவியவர்களுக்கு வஹீயை புரிந்து கொள்ளவும், இஸ்லாத்தின் செய்தியைப் புரிந்துகொள்ளவும், வெளிப்படையான மோதலின்றி தங்கள் மதத்தைப் பின்பற்றவும் உதவியது.

## பகுதி 2: குடும்பத்திற்கு அழைப்பு விடுத்தது

- நபித்துவத்தின் மூன்றாம் ஆண்டின் முடிவில், கீழ்க்கண்ட அல்அஷ்ஷுஃராவின் குர்ஆன் வசனம் இறங்கியது.

- ''இன்னும், உம்முடைய நெருங்கிய உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வீராக! மேலும், நம்பிக்கையாளர்களில் உம்மைப் பின்பற்றியவருக்கு உம்முடைய (பரிவு என்னும்) இறக்கையைத் தாழ்த்துவீராக!'' – அல்அஷ்ஷுஃரா (26:214 – 215)

- இதற்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் தனது பிரசங்கத்தை பொதுவெளியில் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை உணர்ந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் முதலில் தம் குடும்பத்தினரை ஒரு உணவு விருந்துக்கு அழைத்தார்கள்.

- பனு ஹாஷிம் கோத்திரத்தைச் சேர்ந்த சுமார் 40 பேர் அவர்களது வீட்டிற்கு அழைக்கப்பட்டனர்.

- அவர்கள் அனைவரும் நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்தனர். அவர்கள் சாப்பிட்டு முடித்தவுடன், மூத்தவரான அபூலஹப் (நபியின் பெரிய தந்தை) ஏதோ நடக்கப் போவதை உணர்ந்தார். அதனால், எதோ ஒரு காரணத்தைச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

- சிறிது நேரம் கழித்து, மேலும் சிலர் வெளியேறினர். இதனால் நபி (ஸல்) அவர்கள் தமது செய்தியை சொல்ல முடியவில்லை.



- சில நாட்களுக்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் அதே குழுவினரை மற்றொரு உணவு விருந்துக்கு அழைத்தார்கள். ஆனால் இந்த முறை மக்கள் தங்கள் உணவை சாப்பிட்டு முடிப்பதற்குள், நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்று தனது பிரசங்கத்தை தொடங்கினார்கள்.

- இஸ்லாத்தின் செய்தியை மக்களுக்கு எடுத்துக் கூறி அழைப்பு விடுத்தார்கள். சிலை வணக்கத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள் என்றும், அல்லாஹ் அவர்களுக்கு இம்மையில் நன்மைகளையும், மறுமையில் சொர்க்கத்தையும் வழங்குவான் என்றும் கூறினார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் வீட்டில் வசித்துவந்த சுமார் 13 வயதுடைய அலீ இப்னு அபி தாலிப் அவர்கள் எழுந்து நின்று நபியையும், அவர்களுடைய செய்தியையும் ஆதரிப்பதாகக் கூறினார்.

- நபி (ஸல்) அவர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்ய, அபூலஹப் எரிச்சலடைந்தான்.

- அவன் கூட்டத்தினரிடம், ''இது வெட்டிச் செய்தியாகத் தெரிகிறது. நமது முன்னோர்களின் வழி நமக்கு இருக்கிறது'', எனக் கூறிவிட்டு அங்கிருந்து அவன் கிளம்பிவிட்டான்.

- கூட்டத்தில் இருந்த மற்ற உறவினர்கள் இந்தச் செய்தியை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

## பகுதி 3: ஸஃபா மலையிலிருந்து பொது அழைப்பு விடுத்தது

- இந்தச் சம்பவத்திற்கு சில நாட்களுக்குப் பிறகு, நபி (ஸல்) அவர்கள் ஸஃபா மலையின் உச்சியில் ஏறி, மக்காவின் அனைத்து மக்களையும் அழைத்தார்கள்.

- மக்கள் அனைவரும் கூடியபோது, அவர்கள் புகழ்பெற்ற தனது உரையை நிகழ்த்தினார்கள். அதன் சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:



- நபி (ஸல்) மக்களிடம், ''மக்காவைத் தாக்குவதற்காக எனக்குப் பின்னால் ஒரு இராணுவம் உள்ளது, என்று நான் உங்களிடம் சொன்னால், நீங்கள் என்னை நம்புவீர்களா?'' என வினவினார்கள்.

- அதற்கு அம்மக்கள், ''ஆம்! நீங்கள் பொய் சொன்னதாக நாங்கள்

கேள்விப்பட்டதே இல்லை'' என்று பதிலளித்தனர்.

- அப்போது நபி (ஸல்) அவர்கள், ''அப்படியானால், நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் திரும்பாமல், உங்கள் உருவ வழிபாட்டை விட்டுவிடவில்லையென்றால், மறுமை நாளில் கடுமையான தண்டனை வரும் என்று அறிவிப்பதற்காக அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட எச்சரிக்கையாளர் நான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள்.

- நபி (ஸல்) தூரத்து கோத்திரத்தாரில் தொடங்கி, நெருங்கிய கோத்திரத்தார் வரை அனைத்து கோத்திரத்தாரையும் பெயரிட்டு அழைத்தார்கள்.

- மேலும் அவர்கள் தமது உறவினர்களை அழைத்து, நரக நெருப்பிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், ஒரே இறைவனான அல்லாஹ்வை நம்பவும் கேட்டுக் கொண்டார்கள்.

- இறுதியாக, நபி (ஸல்) அவர்கள் தம் அருமை மகள் பாத்திமாவிடம், ''ஓ பாத்திமா பின்த் முஹம்மதே! நீ உன்னை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வுலகில் என்னிடமுள்ள அனைத்தையும் உனக்கு தரமுடியும் என்பதைத் தவிர, மறுமையில் உன்னைக் காப்பாற்றவே முடியாது'', என தனது உரையை முடித்தார்கள்.

- இது ஒரு உத்வேகத்துடன் கூடிய உணர்ச்சிகரமான செய்தியாக இருந்தது. இதைக்கேட்ட மக்கள் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அமைதியாக இருந்தனர்.

- அப்போது, நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அபூலஹப் எழுந்து, சிறிது மணலை எடுத்து, காற்றில் எறிந்து, ''இந்தச் செய்தி இந்த மணலின் மதிப்புகூட இல்லாத செய்தி'' எனக் கூறினான்.

- மேலும் அவன் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து, ''உன் கைகள் அழியட்டும்! இதற்காகவா இன்று எங்களை இங்கே அழைத்து வந்தாய்?'', என்று கூறினான். அப்போது அங்கு அமைதி நிலவ, மக்கள் வெளியேறத் தொடங்கினர்.

- இதற்குப் பதிலளிக்கும் விதமாக, அல்லாஹ் தனது வசனங்களை வெளிப்படுத்தினான்: ''அபூலஹபின் கைகள் அழிந்து போகட்டும். அவனும் நாசமாகட்டும். அவனுடைய செல்வமும் அவன் சம்பாதித்தவையும்

அவனுக்குப் பயன்படவில்லை. விரைவில் அவன் கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் புகுவான். விறகு சுமப்பவளான அவனுடைய மனைவியோ – அவளுடைய கழுத்தில் முறுக்கேறிய ஈச்சங் கயிறுதான் இருக்கும்; அதனால், அவளும் அழிவாள்.'' – அல்-மஸத் (111:1–5).

- அபூலஹப் நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை; அவன் இஸ்லாத்தின் செய்தியை பகிரங்கமாக எதிர்த்த முதல் நபர் ஆவான். மேலும் அவன், நபி (ஸல்) அவர்களிடமும், அவர்களது தோழர்களிடமும் மிகுந்த பகைமையையும், கொடுமையையும் காட்டினான்.

## பகுதி 4: குரைஷிகள் அபுதாலிபுக்கு அழுத்தம் கொடுத்தது

- ஸஃபா மலையில் நடந்த முதல் பொது அழைப்பு நிகழ்விற்குப்பின், நபி (ஸல்) அவர்கள் எல்லா பொது இடங்களிலும் குறிப்பாக கஃபாவின் முன்பாக, ஹஜ் பயணிகளிடமும் மற்றும் மக்காவிற்கு வரும் மக்களிடமும் பிரசங்கம் செய்யத் தொடங்கினார்கள்.

- தாஃவா (இஸ்லாமிய அழைப்பு) பகிரங்கமாக மாறியவுடன், மக்களின் எதிர்ப்பும் வெளிப்படையாகத் தொடங்கி விட்டது.



- நபி (ஸல்) அவர்களின் பிரசங்கத்தை முறியடிப்பதற்கான முதல் முயற்சியாக அவர்களது பெரிய தந்தையும், பனு ஹாஷிமின் தலைவருமான அபுதாலிபிடம் முறையிட்டு அழுத்தம் கொடுக்கவேண்டும் என முடிவு செய்தனர்.

- குரைஷிகளைச் சேர்ந்த மூத்தவர்கள் சிலர் அபுதாலிபிடம் சென்று, ‘‘உங்கள்

சகோதர் மகன் நமது சிலைகளைத் திட்டுகிறார். நமது மூதாதையர்களிடமிருந்து மாறுபட்ட செய்தியைப் பரப்புகிறார். இதை நீங்கள் நிச்சயமாக அனுமதிக்க கூடாது'' என்று கூறினார்கள்.

- அபுதாலிப் சில மென்மையான வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை சமாளித்து அனுப்பிவிட்டார். மேலும் இந்த விஷயம் விரைவில் சரியாகிவிடும் என நம்பினார்.

- இதற்கிடையில் மக்காவில் கணிசமான மக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். மக்காவிற்கு வருபவர்களும், ஹஜ் பயணிகளும் இஸ்லாத்தின் செய்தியை தங்கள் சொந்த ஊருக்கு எடுத்துச் சென்றனர்.

- குரைஷிகளின் மூத்த தலைவர்கள் இன்னும் தீவிரமாக ஏதாவது ஒன்றைச் செய்து நபி (ஸல்) அவர்களின் பிரசாரத்தைத் தடுக்கவேண்டும் என்று எண்ணினர். உருவ வழிபாட்டை நபி (ஸல்) அவர்கள் கண்டித்ததை குரைஷிகள் தங்களிடம் தொடுக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட தாக்குதலாகக் கருதி, தங்கள் கலாச்சாரம், வாழ்க்கை முறை மற்றும் கண்ணியத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதினர்.

- குரைஷித் தலைவர்கள் அதிக எண்ணிக்கையில் திரண்டு அபுதாலிபின் மீது அழுத்தத்தை அதிகப்படுத்தினர். ''உங்கள் சகோதரின் மகன் நமது முன்னோர்களை அவமதிக்கிறார். இனியும் எங்களால் தாங்க முடியாது'', என்று கூறினர்.

- அவர்கள் அபுதாலிப்பிற்கு இரண்டு தீர்வுகளைக் கொடுத்தனர். ஒன்று நீங்கள் அவரது பிரச்சாரத்தை நிறுத்துங்கள். அல்லது நீங்கள் அவரை எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்; மற்றவைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'', என்று கூறினர்.

- பின்னர் அபுதாலிப், நபி (ஸல்) அவர்களிடம் சென்று மக்கள் தன்னிடம் கூறிய அனைத்தையும் உணர்ச்சிப்பூர்வமாக விவரித்தார்.

- இறுதியாக அவர், ''உங்கள் மீது கருணை காட்டுங்கள், என்னிடமும் கருணை காட்டுங்கள். சிக்கலான சூழ்நிலையில் என்னை தள்ளிவிடாதீர்!'', என்று கூறினார்.

- அபுதாலிப் தனது சொந்த குழந்தைகளை விட நபி (ஸல்) அவர்களை மிகவும்

நேசித்தார். நபி (ஸல்) அவர்கள் இவரது சகோதரர் அப்துல்லாவின் ஒரே மகன் ஆவார்.

- மேலும், ஒரு மகன் தன் தந்தையை நேசிப்பதைப் போல, நபி (ஸல்) அவர்கள் தனது பெரிய தந்தையை நேசித்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு, ‘‘எனது பெரிய தந்தையே! அவர்கள் என் வலது கையில் சூரியனையும், என் இடது கையில் சந்திரனையும் கொடுத்தால் கூட, நான் வெற்றிபெறும் வரை என்னால் இந்த ஓரிறைக்கொள்கை பிரச்சாரத்தை விட முடியாது. ஒருவேளை மரணம் என்னைத் தழுவினால், நான் இந்தப் பாதையிலேயே மரணமடைகிறேன்’’ என்று பதிலுரைத்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களிடம் இருந்த உறுதியையும் நேர்மையையும் கண்டபோது, அவர்களிடம், ‘‘என் சகோதரரின் மகனே! நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ அதைச் செய்யுங்கள். நீங்கள் செய்வதை நான் இனி ஒருபோதும் தடுக்க மாட்டேன்’’ என்று கூறினார். மேலும், அவர் தான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றினார்.